# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 14,572 — 1965 නොවැම්බර් 29 වැනි සඳුද — 1965.11.29**

14,572 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### உள்ளூர் அதிகாரத்தாபனங்கள் தேர்தல்கள்

**புதிய தேர்தற் சட்டங்கள்**

*பொது சனங்கள் அறிதற்கான அறிவித்தல்*

உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட ஏற்பாடுகளின் திருத்தங்கள் சிலவற்றின் பொருத்தமான பகுதிகள், பொது சனங்களும் அரசியற் கட்சிகளும் அறிதற்பொருட்டு, பிரித்தெடுத்து கீழே மீளவெளியிடப்படுகின்றன.

ஈ. எப். டயஸ் அபேசிங்கா,
தேர்தல்கள் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

தேர்தல்கள் அதிகாரியின் கந்தோர்,
33, ஹோட்டன் பிளேஸ்,
கொழும்பு 7,
25.11.1965

**குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள்**

*உள்ளூர்த் தேர்தல்களின் பொருட்டு ஒப்புக்கொள்ளப் பட்ட அரசியற் கட்சிகள்*

27எ. (1) ஒரு அரசியற்கட்சி, இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழும் அவற்றிற்கமையவும் உள்ளூர்த் தேர்தல்களின் பொருட்டு, ஒப்புக்கொள்ளப்பட்டதோர் அரசியற் கட்சியாக மதிக்கப்படும் உரித்துடையதாகும்.

(2) ஒரு அரசியற்கட்சி, உள்ளூர்த் தேர்தல்களுக்கு உடன் முந்திய கடைசிப் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில், அபேட்சகர்களால் செலுத்தப்படவேண்டிய கட்டுப்பணம்பற்றிய பாராளுமன்றத் தேர்தல்கள அரசப் பேரவைக் கட்டளையின் 29 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பொருட்டு அக கட்டளையின்கீழ் ஒப்புக்கொள்ளப்பட்டதோர் அரசியற் கட்சியாக மதிக்கப் பட்டிருந்தால் மட்டுமே அந்த உள்ளூர்த் தேர்தல்களின் பொருட்டு, ஒப்புக்கொள்ளப்பட்டதோர் அரசியற் கட்சியாக மதிக்கப்படும்.

(3) ஒரு அரசியற்கட்சி, (2) ம் உடபிரிவின ஏற்பாடுகளின தொழிற் பாட்டின் பலத்தால், உள்ளூர்த தேர்தல்களின் பொருட்டு ஒப்புக் கொள்ளப்பட்டதோர் அரசியற் கட்சியாக மதிககப்படும் உரித்துடையதாயிருக்குமாயின், அத்தகைய உள்ளூர்த் தேர்தல்களுக்கு உடன் முநதிய கடைசிப் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில பாராளுமன்றத் தேர்தல்கள் அரசப் பேரவைக் கட்டளையின்கீழ் அக்கட்சியின் அபேட்சகர்களுக்கு ஒதுக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சின்னமே, (2) ம் உட்பிரிவின் பலத்தால் அக்கட்சி அவ்வித உரித்தற்றதாகும் தேதிவரை அதன்பொருட்டு அதற்கு ஒதுக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சின்னமாக கருதப்படும்.

*அலுவலக வாக்கெடுப்பு அட்டைகள்*

39எ. (1) ஒரு தேர்தல் போட்டியிடப்படும் வட்டாரம் எதனதும் தெரிவு அத்தாட்சி உத்தியோகத்தர், அந்த வட்டாரம் இவ்வுட்பிரிவு பொருந்தும் ஒரு வட்டாரமாகவிருப்பின், அந்த வட்டாரத்துக்கான வாக்காளர் இடாப்பில் பெயர் காணப்படும் வாக்காளர் ஒவ்வொருவருக்கும் பினவருவனவற்றைக் குறிப்பிட்டு ஒரு வாக்கெடுப்பு அட்டையை தபால் மூலம் அனுப்புவார் :—

(அ) அவ்வட்டாரத்தின் இலக்கமும் (பெயரேதுமிருப்பின) பெயரும்.

(ஆ) வாக்காளர் இடாப்பில் சொல்லப்படுகின்றபடி வாக்காளர் பெயரும், முகவரியும், இலக்கமும்.

(இ) அந்த வாக்காளருக்கு ஒதுக்கப்படும் வாக்கெடுப்பு நிலையம்.

(ஈ) வாக்கெடுப்புத் தேதியும் நேரமும்.

(2) உட்பிரிவு (1) இன் கீழான வாக்கெடுப்பு அட்டையொன்று, வாக்கெடுப்புத் தேதிக்கு ஐந்து நாட்களுக்காவது முன்னதாக வாக்காளருககு கிடைக்குமாறு அனுப்பப்படவேண்டும். ஒரு தபாற் கந்தோர் அந்த வாக்கெடுப்பு அட்டை ஒன்றை அது அனுப்பப்பட்ட ஆளிடம் கொடுக்கத் தவறினல், அது, அவ்வாக்கெடுப்புத் தேதிவரை அந்த தபாற் கந்தோரில் வைத்திருக்கப்பட்டு, முகவரிக்குரியவர் அதைப் பெறுதற்குச் சென்றால் அவரிடம் கொடுக்கப்படும்.

(3) (அ) அதிகாரமின்றி வாக்கெடுப்பு அட்டை எதையும் வேறு ஆள எவருக்கும் வழங்கும் : அல்லது

(ஆ) வாக்கெடுப்பு அட்டை எதையும் வேறு எந்த ஆளுக்கும் விற்கும் அல்லது விற்க முற்படும் அல்லது வேறு ஆள எவரிடமிருந்தும் வாக்கெடுப்பு அட்டை எதையும் கொளளும் அல்லது கொள்ள முற்படும்,

ஒவ்வொருவரும் ஒரு குற்றத்துக்கு குற்றவாளியாகி, ஒரு நீதவான முன்னிலையில் உடனடியான ஒரு விசாரணைக்குப் பின்னர் குற்றவாளியாக காணப்படுங்கால ஐநூறு ரூபாய்க்கு மேற்படாத ஒரு தண்டத்துக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கு இருவகை மறியலகளில் ஏதாவதொன்றுக்கு அல்லது அத்தண்டம், மறியல் ஆகிய இரண்டுக்கும் ஆளாவர்.

(3எ) (அ) வேறு எந்த ஆளினதும் வாக்கெடுப்பு அட்டையை தம் வசம் வைத்திருக்கும், தமது கடமையின்போது ஒரு அரசாங்க ஊழியராக செயலாற்றும் அத்தகைய ஊழியரல்லாத, அல்லது

(ஆ) அலுவலக வாக்கெடுப்பு அட்டையை அல்லது இக்கட்டளைச் சட்டத்தினகீழ் எத்தேர்தலிலும் ஒரு அலுவலக வாக்கெடுப்பு அட்டையாக கருதப்படுவதை அல்லது உபயோகிகத் தகுதியானதை தக்க அதிகாரமின்றி அச்சிடும்,

ஒவ்வொருவரும் ஒரு குற்றத்துக்கு குற்றவாளியாகி ஒரு நீதவான முன்னிலையில் உடனடியான ஒரு விசாரணைக்குப் பின்னர் குற்றவாளியாக காணப்படுங்கால் ஐநூறு ரூபாய்க்கு மேற்படாத ஒரு தண்டத்துக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கு இருவகை மறியல்களில் ஏதாவதொன்றுக்கு அல்லது அத்தண்டம், மறியல் ஆகிய இரண்டுக்கும் ஆளாவர்.

(4) அமைச்சர், காலத்துக்குக் காலம் கசெற்றில் பிரசுரமாகும் கட்டளை மூலம், அக்கட்டளையில் குறிப்பிடப்படும் தேதியிலிருந்து அதே பிரகாரம் குறிப்பிடப்படும் தேர்தற் பிரதேசம் அல்லது பிரதேசங்கள் எதனதும்

வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் (1) ம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பொருந்துமென வெளிப்படுத்தலாம்.

**குறிப்பு :** அமைச்சர், 6.12.65 ல் இருந்து மாநகர சபைகள், நகர சபைகள், பட்டினச் சபைகள் ஆகியவற்றின் பொதுத் தேர்தல் உப தேர்தல் ஒவ்வொன்றின் விடயத்திலும் இந்த ஏற்பாடுகளை, பொருந்தக் கூடியவையாக ஆக்கியுள்ளார்.

## வாக்காளர்களுக்கு அடையாளமிடுவதற்கு அழியாத மையின் உபயோகம்

53எ. (1) உள்ளூர்த் தேர்தல் எதிலும் எந்த வாக்காளருக்கும்—

(அ) தலைமை தாங்கும் உத்தியோகத்தரையேனும் அவரது அதிகாரத்தின் கீழ் செயலாற்றும் ஒருவரையேனும் உரிய பரிசோதனையைச் செய்வதற்கு விட, அவர், மறுத்தால் ; அல்லது

(ஆ) அத்தகைய பரிசோதனையைச் செய்யவிட்டு அந்த வாக்காளர் ஏற்கனவே உரிய அடையாளமிடப்பட்டுள்ளாரென அது காட்டினால் ; அல்லது

(இ) அத்தகைய பரிசோதனையைச் செய்ய விட்டு, அந்த வாக்காளர் ஏற்கனவே உரிய அடையாளம் இடப்பட்டிருக்கவில்லையென அது காட்ட, அந்த வாக்காளர் அந்த உத்தியோகத்தரையேனும் ஆளையேனும் உரிய அடையாளத்தால் அந்த வாக்காளருக்கு அடையாளமிடுதற்குவிட மறுத்தால்,

வாக்குத்துண்டு கொடுக்கப்படமாட்டாது ; மேலும் அதற்கிணைய, இந்த கட்டளைச் சட்டத்தின் வேறு எந்த ஏற்பாட்டிலும் இதற்கு மாறாக எதுதானிருப்பினும் அந்த வாக்காளர் அந்தத் தேர்தலில் வாக்களிக்கும் உரித்துடையவராகார்.

(2) ஒரு வாக்கெடுப்பு நிலையத்தின் தலைமை தாங்கும் உத்தியோகத்தர், இக்கட்டளைச் சட்டத்துக்குள்ள ஏழாவது அட்டவணையில் குறித்துள்ள படிவத்தில் உள்ளபடியான ஒரு நிரலில், அந்த நிலையத்தில் (1) ம் உட்பிரிவின்கீழ் ஒரு வாக்குத்துண்டு கொடுக்கப்படாத வாக்காளர் ஒவ்வொருவரையும் பற்றிய கீழ்க்காணும் விவரங்களைப் பதிவு செய்வார் :—

(அ) தேர்தல் நடைபெறும் தேர்தற் பிரதேசத்து வட்டாரத்தின் வாக்காளர் இடாப்பில் உள்ள அவ்வாக்காளரின் இலக்கமும் ;

(ஆ) அந்த இடாப்பில் காணப்படுகின்றபடி, அந்த வாக்காளரின் பெயரும் முகவரியும் ;

(இ) அந்த வாக்காளருக்கு ஒரு வாக்குத் துண்டு கொடுக்கப்படாத காரணமும்.

இக்கட்டளைச் சட்டத்தில், அந்த நிரல், " 53எ பிரிவின்கீழ் வாக்குத் துண்டு கொடுக்கப்படாத வாக்காளரின் நிரல் " எனப்படுகிறது.

(3) இப்பிரிவில,—

(அ) " உரிய அடையாளம் " எனும் சொற்றொடர் அழியாத மையினால் இடப்பட்ட ஒரு அடையாளம் எனப்பொருள்படுகிறது ;

(ஆ) ஒரு வாக்காளரைப் பரிசோதித்தல் அல்லது அடையாளமிடுதல் சார்பான அல்லது சம்பந்தமான தொடர்பு எதையும் குறித்து சொல்லப்படும் " உரிய " எனும் பதம்,—

(i) அவருடைய இடக்கைச் சிறுவிரல் அல்லது அவ்விரலில்லா விட்டால் அவரது இடக்கையின் மற்ற விரல் எதுவும் ;

(ii) அவருடைய இடக்கை விரல் ஒன்றுமேயில்லாவிட்டால், அவரது வலக்கைச் சிறுவிரல் அல்லது அவ்விரலில்லா விட்டால் அவரது வலக்கையின் மற்ற விரல் எதுவும் ; அல்லது

(iii) அவருடைய இட, வலக் கைகளில் ஒரு விரலேனும் இல்லாவிட்டால் அவ்வாக்காளருக்கிருக்கும் இடது அல்லது வலது கையின் நுனி

எனப்பொருள்படுகிறது.

(4) (அ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான எத்தேர்தலிலும், தக்க அதிகாரமின்றி, வாக்காளர் எவர் மீதும் ஒரு உரிய அடையாளத்தையேனும் அந்த அடையாளமாக தோன்றக்கூடிய அல்லது நினைக்கக்கூடிய ஒன்றையேனும் இடும் ; அல்லது

(ஆ) அத்தகைய தேர்தலில் வாக்காளர் எவர்மீதும் இடப்பட்ட உரிய அடையாளம் எதையும் தக்க அதிகாரமின்றி கபடமாக அழிக்கும்,

ஒவ்வொருவரும் ஒரு குற்றத்துக்கு குற்றவாளியாகி ஒரு நீதவான் முன்னிலையில் உடனடியான ஒரு விசாரணைக்குப் பின்னர் குற்றவாளியாக காணப்படுங்கால் ஐநூறு ரூபாய்க்கு மேற்படாத ஒரு தண்டத்துக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கு இருவகை மறியல்களில் ஏதாவதொன்றுக்கு அல்லது அத்தண்டம், மறியல் ஆகிய இரண்டுக்கும் ஆளாவர்.

## ஆள் மாறாட்டம்

80. இக்கட்டளைச் சட்டத்தின்கீழான தேர்தல் எதிலும், உயிரோடிருக்கும் அல்லது இறந்துபோன அல்லது பொய்யான வேறு ஆள் எவரதும் பெயரில் வாக்குத்துண்டு ஒன்றுக்கு விண்ணப்பிக்கும் அல்லது அத்தகைய தேர்தலில் ஒரு முறை வாக்களித்துவிட்டு அதே தேர்தலில் தமது சொந்தப் பெயரில் ஒரு வாக்குத் துண்டுக்கு விண்ணப்பிக்கும் எவரும் ஆள்மாறாட்டக் குற்றத்துக்கு குற்றவாளியாவர். அது குற்றவியல் வழக்கு நடைமுறைச் சட்டக் கோவையின் பொருளுக்குள் விசாரணைக்குட்படத் தக்க குற்றமாகும். ஒரு நீதவான் முன்னிலையில் உடனடியான ஒரு விசாரணைக்குப் பின்னர் குற்றவாளியாக காணப்படுங்கால், அவர், ஒரு வருட காலத்துக்கு மேற்படாத கடூழியச் சிறைக்கு ஆளாவார்.

## முறையற்ற செல்வாக்கு

81 (1) இந்த கட்டளைச் சட்டத்தின்கீழான தேர்தல் எதிலும் எந்த ஆளையும் வாக்களிக்குமாறு அல்லது வாக்களிக்காதிருக்குமாறு தூண்டும் அல்லது கட்டாயப்படுத்தும் பொருட்டு அல்லது அந்த ஆள் அத்தேர்தலில் வாக்களித்த அல்லது வாக்களிக்காதிருந்த காரணத்துக்காக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும், தாமாகவோ தமது சார்பில் வேறு ஆள் மூலமாகவோ அந்த ஆள்மீது அல்லது அந்த ஆளுக்கு எதிராக பலம், பலாத்காரம் அல்லது அடக்குமுறை எதையும் உபயோகிக்கும் அல்லது உபயோகிப்பதாகப் பயமுறுத்தும் அல்லது தாமாகவோ தமது சார்பில் வேறு ஆள் மூலமாகவோ ஏதும் லௌகிக அல்லது ஆத்மீக ஊறுபாட்டை, சேதத்தை, தீங்கை அல்லது நட்டத்தை விளைக்கும் அல்லது விளைப்பதாகப் பயமுறுத்தும் ; அல்லது

(2) கடத்திச்சென்று, அடக்கிவைத்து அல்லது கபடமான உபாயம் அல்லது தந்திரம் எதனாலும் எந்த வாக்காளரதும் வாக்குரிமை சுயேச்சையாக பிரயோகிக்கப்படுவதை இடர்ப்படுத்தும் அல்லது தடுக்கும் அல்லது அதனால் எந்த வாக்காளரையும் அத்தேர்தலில் அவரது வாக்கை கொடுக்குமாறேனும் கொடுக்காதிருக்குமாறேனும் கட்டாயப்படுத்தும் தூண்டும் அல்லது அடக்கும் ; அல்லது

(3) ஒரு மதபீடத்தின் அல்லது தாபனத்தின் ஒரு உறுப்பினராக அல்லது அலுவலாளராக இருந்துகொண்டு, எந்த தேர்தலிலும் எந்த அபேட்சகருக்கும் வாக்களிக்குமாறேனும் வாக்களிக்காதிருக்குமாறேனும் அல்லது அத்தேர்தலில் எந்த அரசியற் கட்சியையும் ஆதரிக்குமாறேனும் ஆதரிக்காதிருக்குமாறேனும் அத்தகைய மதபீடத்தின் அல்லது தாபனத்தின் உறுப்பினர் அல்லது அபிமானி எவரையும் தூண்டும் அல்லது கட்டாயப்படுத்தும் பொருட்டு, அல்லது அந்த உறுப்பினர் அல்லது அபிமானி அத்தேர்தலில் எந்த அபேட்சகருக்கும் வாக்களித்த அல்லது வாக்களிக்காத அல்லது அத்தேர்தலில் அரசியற் கட்சி எதையும் ஆதரித்த அல்லது ஆதரிக்காத காரணத்துக்காக,—

(அ) அப்பீடத்தின் அல்லது தாபனத்தின் உறுப்பினருக்கேனும் அபிமானிக்கேனும் அவ்வுறுப்பினரின் அல்லது அபிமானியின் குடும்பத்தவருக்கேனும், அந்த உறுப்பினர் அல்லது அபிமானி சாதாரண நடப்பில் உரித்துள்ளவராயிருக்கும் ஆத்மீய குருத்துவத்தை, சேவையை அல்லது சகாயத்தை மறுக்கும் அல்லது மறுக்கப்படுமென பயமுறுத்தும் ; அல்லது

(ஆ) அந்த உறுப்பினரை அல்லது அபிமானியை அத்தகைய பீடத்திலிருந்து அல்லது தாபனத்திலிருந்து விலக்கும் அல்லது விலக்கிவிடுவதாகப் பயமுறுத்தும் ; அல்லது

(4) வேறு எந்த ஆளினதும் வேலை கொள்பவராக இருந்துகொண்டு அத்தேர்தலில் எந்த அபேட்சகருக்கும் வாக்களிக்குமாறேனும் வாக்களிக்காதிருக்குமாறேனும் அல்லது அத்தேர்தலில் எந்த அரசியற் கட்சியையும் ஆதரிக்குமாறேனும் ஆதரிக்காதிருக்குமாறேனும் அல்லது அந்த ஆள் அத்தேர்தலில் எந்த அபேட்சகருக்கும் வாக்களித்த அல்லது வாக்களிக்காத அல்லது அத்தேர்தலில் எந்த அரசியற் கட்சியையும் ஆதரித்த அல்லது ஆதரிக்காத காரணத்துக்காக,—

(அ) அந்த வேலையை நிறுத்தும் அல்லது நிறுத்திவிடுவதாக பயமுறுத்தும் ; அல்லது

(ஆ) அந்த வேறு ஆள் ஏற்கனவே அனுபவித்த அல்லது அந்த வேலையின் சாதாரண நடப்பில் அனுபவிக்கக்கூடிய சகாயம் அல்லது சேவை எதையும் மறுக்கும் அல்லது மறுக்கப்படுமெனப் பயமுறுத்தும் ; அல்லது

(5) எந்த தேர்தலிலும் நியமிப்பு நாட் தொடக்கம் அத்தேர்தலின் வாக்கெடுப்புத் தேதிக்கு அடுத்த நாள் வரையுள்ள காலத்தில் எச்சமயத்திலேனும்,—

(அ) அத்தேர்தல் முடிவை வசப்படுத்தும் அல்லது அத்தேர்தலில் எந்த அபேட்சகருக்காவது வாக்களிக்குமாறேனும் வாக்களிக்காதிருக்குமாறேனும் தூண்டும் பொருட்டு மதக் கூட்டமெதிலும் எவ்வார்த்தைகளையும் பேசும் ; அல்லது

(ஆ) அதன் பொருட்டு, மதக் கூட்டமெதிலும் துண்டுப் பிரசுரம், விளம்பர அட்டை, சுவரொட்டி, அறிவித்தல், சின்னம், கொடி அல்லது விருது எதையும் விநியோகிக்கும் ; அல்லது

(இ) அத்தேர்தலில் எந்த அபேட்சகரும் தெரிவு செய்யப்படுதலை வளப்படுத்தும் நோக்கமாக ஒரு வழிபாட்டிடத்தில் ஒரு பொதுக்கூட்டத்தை நடத்தும் அல்லது நடத்துவிக்கும்,

ஒவ்வொருவரும் முறையற்ற செல்வாக்குக் குற்றத்துக்கு குற்றவாளியாகி ஒரு நீதவான் முன்னிலையில் உடனடியான ஒரு விசாரணைக்குட் பின்னர் குற்றவாளியாக காணப்படுங்கால் ஐநூறு ரூபாய்க்கு மேற்படாத ஒரு தண்டத்துக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கு இருவகை மறியல்களில் எதாவதொன்றுக்கு அல்லது அத்தண்டம், மறியல் ஆகிய இரண்டுக்கும் ஆளாவர்.

## ஒரு வாக்களிப்பு நிலையத்திலிருந்து கால் மைல் தூரத்துக்குள் ஆதரவு தேடுதல், முதலியன

81எ. (1) ஒரு வாக்களிப்பு நிலையத்தில் வாக்கெடுப்பு நடைபெறும் எத்தேதியிலும் அவ்வாக்களிப்பு நிலையத்தின வாயிலிலிருந்து கால் மைல் தூரத்துக்குள் கீழ்க்காணும் காரியங்கள் எதையும் எவரும் செய்யலாகாது :—

(அ) வாக்குகளுக்கு ஆதரவு தேடுதல் ;

(ஆ) எவ்வாக்காளரதும் வாக்கை பணிந்து கேட்டல் ;

(இ) குறித்த எந்த அபேட்சகருக்கும் வாக்களிக்க வேண்டாமென்று வாக்காளர் எவரையேனும் வலிந்து கேட்டல் ;

(ஈ) அத்தேர்தலில் வாக்களிக்கவேண்டாமென்று வாக்காளா எவரையேனும் வலிந்து கேட்டல் ;

(உ) அத்தேர்தல் சம்பந்தமான (அலுவலக துண்டுப்பிரசுரம், விளம்பர அட்டை, சுவரொட்டி அல்லது அறிவித்தல் அல்லாத, வேறு) துண்டுப்பிரசுரம், விளம்பர அட்டை, சுவரொட்டி அல்லது அறிவித்தல் எதையுமேனும் 38 ம் பிரிவின்கீழ் அபேட்சகர் எவருககும் ஒதுக்கப்பட்ட சின்னம் எதையுமேனும் விநியோகித்தல் அல்லது காட்சிக்கு வைத்தல்.

(2) எந்த வாக்களிப்பு நிலையத்திலும் வாக்கெடுப்பு நடைபெறும் எத்தேதியிலும், வாக்களிப்பு நிலையத்திற்கு வாக்களிக்கவரும் எவருக்கும் தொல்லை விளைக்கக்கூடியதாக அல்லது அந்த வாக்கெடுப்பு நிலையத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களினதும் வேறு ஆட்களினதும் வேலைக்கு குந்தகம் விளைவிக்கக் கூடியதாக, எவரும்,—

(அ) ஒரு வாக்கெடுப்பு நிலையத்துக்குள் அல்லது அதன் வாயிலில் அல்லது அதன் அருகாமையிலுள்ள பொது அல்லது சொந்த இடம் எதிலும் மனிதக் குரலை மிகைப்படுத்தும் அல்லது மீளவெளியிடும் பேரொலிக்கருவி அல்லது ஒலிபரப்பி எதையும் உபயோகிக்கவோ இயக்கவோ கூடாது, அல்லது

(ஆ) ஒரு வாக்கெடுபபு நிலையத்துக்குள் அல்லது அதன் வாயிலில் அல்லது அதன் அருகாமையிலுள்ள பொது அல்லது சொந்த இடம் எதிலும் கூச்சலிடவோ அல்லது வேறுவகையில முறைகேடான செயல் புரியவோ கூடாது.

## தேர்தல் தினத்தில் கட்டடங்களின் உபயோகம், ஊர்வலங்கள் முதலியவற்றின் கட்டுப்பாடு

81எ. (2எ) (அ) தேர்தற் பிரதேசமெதிலும், எத்தேர்தலினும் அபேட்சகராயிருக்கும் எவரும் அத்தேர்தலில் வாக்கெடுக்கப்படும் தினத்தில், அப்பிரதேசத்திலுள்ள அவ்வபேட்சகரின சாதாரண வதிவிடமல்லாத வேறு (தற்காலிகமான அல்லது வேறு விதமான) கட்டடம் எதையும் அந்த அபேட்சகர் தெரிவு செய்யப் படுத்தலை வளப்படுத்துவதற்கு திட்டமிடப்படும் எத்தேவைக்கும் உபயோகிக்கக்கூடாது ;

(ஆ) தேர்தற் பிரதேசமெதிலும், எத்தேர்தலிலும் நியமிபபுத் தினம் தொடக்கம் அத்தேர்தலில் வாக்கெடுக்கப்படும் தேதிக்கு அடுத்த நாள் முடியவுள்ள காலத்தில் எச்சமயத்திலும், எந்த வருடத்திலும் மே 1 ல் நடக்கும் ஒரு ஊர்வலம் அல்லது சமய அல்லது சமூக நோக்கங்களுக்கான ஏதேனும் ஊர்வலமல்லாத வேறு ஊர்வலம் எதையும் எவரும் நடத்தவோ, வைக்கவோ, எதிலும் பங்கு கொள்ளவோ கூடாது ;

(இ) இந்த உட்பிரிவின் (ஆ) பந்தியில் சொல்லப்படும் காலத்தில் வைக்கப்படும் அல்லது நடத்தப்படும் எந்த ஊர்வலத்திலும் குறித்த (ஆ) பந்தியில் சொல்லப்படும் தேர்தலை வளப்படுத்துதற்கு திட்டமிடப்படும் எச்செயலையும் செய்யக்கூடாது ;

(3) உட்பிரிவு (1)ன், உட்பிரிவு (2) ன் அல்லது உட்பிரிவு (2எ) யின் எந்த ஏற்பாடுகளையும் மீறும் ஒவ்வொருவரும் ஒரு குற்றத்துக்கு குற்றவாளியாகி, ஒரு நீதவான் முன்னிலையில் உடனடியான ஒரு விசாரணைக்குப் பின்னர் குற்றவாளியாக காணப்படுங்கால், நூறு ரூபாய்க்கு மேற்படாத ஒரு தண்டத்துக்கு அல்லது ஒரு மாதத்துக்கு மேற்படாத காலத்துக்கு இருவகை மறியல்களில் எதாவதொன்றுக்கு அல்லது அத்தண்டம், மறியல் ஆகிய இரண்டுக்கும் ஆளாவர்.

(4) எந்த பொலிசு உத்தியோகத்தரும், (2) ம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிய செயல் எதையும் தடுப்பதற்கு நியாயமாக அவசியப்படும் அத்தகைய நடவடிக்கைகளை எடுத்து அத்தகைய பலத்தை உபயோகிக்கலாம் ; அத்தகைய மீறுகைக்கு உபயோகிக்கப்படும் உபகாணங்களை கைப்பற்றவும் செய்யலாம்.

(5) இப்பிரிவில் குறிக்கப்பட்டுள்ள குற்றத்தை செய்ய முயற்சிப்பவர் எவரும் அக்குற்றத்துக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனைக்காளாவார்.

(6) இப்பிரிவின் கீழான குற்றம் ஒவ்வொன்றும் குற்றவியல் வழக்கு நடைமுறைச் சட்டக் கோவையின் பொருளுக்குள் விசாரணைக்குட்படத்தக்க ஒரு குற்றமாகும்.

(7) அற்றேணி–ஜெனறலின் அனுமதியின்றி இப்பிரிவின் கீழான ஒரு குற்றத்துக்கு வழக்குத் தொடரப்படலாகாது.

## கொடிகள், நீள்கொடிகள், சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் ஆகியவற்றை காட்சிக்கு வைத்தல்

81பி. (1) இச்சட்டத்தின் கீழான எத்தேர்தலிலும் நியமிப்புத் தினம் தொடக்கம் அத்தேர்தலில் வாக்கெடுக்கப்படும் தினத்துக்கு அடுத்த தினம் முடியவுள்ள காலத்தில், எவரும், அத்தேர்தலில் எந்த அபேட்சகரும் தெரிவு செய்யப்படுதலை வளப்படுத்தும் பொருட்டு,—

(அ) அத்தேர்தலில் ஒரு அபேட்சகராக இருப்பவரின் போக்கு வரத்துக்கு உபயோகிக்கப்படும் வாகனம் எதனுள்ளும் அல்லது எதன் மேலுமன்றி, பொது அல்லது சொந்த வளவு எதிலும் கொடி அல்லது விருது எதையும் ; அல்லது

(ஆ) அத்தேர்தலில் ஒரு அபேட்சகராக இருப்பவரை ஆதரித்து ஒரு கூட்டம் நடைபெறவிருக்கும் வளவு எதனுள்ளும் அல்லது எதன் மேலுமன்றி, எத்தினத்திலேனும், பொதுசனங்கள் சென்றடையும் உரிமையுள்ள அல்லது சென்றடைய அனுமதி வழங்கப்பட்டுள்ள எந்த இடத்தின் மீதும் துண்டுப் பிரசுரம், விளம்பர அட்டை, சுவரொட்டி, அறிவித்தல் அல்லது அடையாளம் எதையும் ; அல்லது

(இ) பொதுத் தெரு எதன் மீதுமேனும் எதற்கும் குறுக்காகவேனும் துண்டுப் பிரசுரம், விளம்பர அட்டை, சுவரொட்டி, அறிவித்தல், அடையாளம், கொடி எதையும் ; அல்லது

(ஈ) அத்தேர்தலில் ஒரு அபேட்சகராக இருப்பவரின் போக்கு வரத்துக்கு உபயோகிக்கப்படும் வாகனம் எதனுள்ளும் அல்லது எதன் மீதுமன்றி, வாகனம் எதற்குள்ளுமேனும் எதற்குமேலுமேனும் துண்டுபபிரசுரம், விளம்பர அட்டை, சுவரொட்டி, அறிவித்தல் அல்லது அடையாளம் எதையும், காட்சிக்கு வைத்தலாகாது.

(2) உட்பிரிவு (1) இன் ஏற்பாடுகள் எதையும் மீறும் ஒவ்வொருவரும், ஒரு குற்றத்துக்கு குற்றவாளியாகி, ஒரு நீதவான் முன்னிலையில் உடனடியான ஒரு விசாரணைக்குப் பின்னர் குற்றவாளியாக காணப்படும் கால், நூறு ரூபாய்க்கு மேற்படாத ஒரு தண்டத்துக்கு அல்லது ஒரு மாதத்துக்கு மேற்படாத காலத்துக்கு இருவகை மறியல்களில் எதாவதொன்றுக்கு அல்லது அத்தண்டம், மறியல் ஆகிய இரண்டுக்கும் ஆளாவர்.

(3) இப்பிரிவில் குறிக்கப்பட்டுள்ள குற்றத்தை செய்ய முயற்சிப்பவர் எவரும் அக்குற்றத்துக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனைக்காளாவார்.

(4) இப்பிரிவின் கீழான குற்றம் ஒவ்வொன்றும் குற்றவியல் வழக்கு நடைமுறைச் சட்டக் கோவையின் பொருளுக்குள் விசாரணைக்குட்படத்தக்க ஒரு குற்றமாகும்.

(5) எந்த பொலிசு உத்தியோகத்தரும், (1) ம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறிய செயல் எதையும் தடுப்பதற்கு நியாயமாக அவசியப்படும் அத்தகைய நடவடிக்கைகளை எடுத்து அத்தகைய பலத்தை உபயோகிக்கலாம் ; அத்தகைய மீறுகையில் உபயோகிக்கப்படும் துண்டுப்பிரசுரம், விளம்பர அட்டை, சுவரொட்டி, அறிவித்தல், அடையாளம், கொடி அல்லது விருது எதையும் கைப்பற்றி, அகற்றவும் செய்யலாம்.

## வாக்களிப்பதற்கு முன்னும் பின்னும் வாக்காளர்களை ஏற்றிக்கொண்டுபோதலும், குற்றங்களும் தண்டனைகளும்

81சி. (1) எந்த வாக்காளரையும் வாக்களிப்பு நிலையத்திற்கு ஏற்றிச் செல்லவோ அல்லது அங்கிருந்து ஏற்றிவரும் அலுவலுக்காக எவ்வித வாகனத்தையும், தோணியையும் அல்லது மிருகத்தையும் விட்டுக் கொடுத்தல், அமர்த்துதல், வாடகைக்குவிடுதல், கைமாற்றுக வாங்குதல் அல்லது பாவித்தல் அல்லது எந்த நபரையும் விட்டுக்கொடுக்கும்படி

கடனளிக்கும்படி, அமர்த்தும்படி, வாடகைக்குவிடும்படி, கைமாற்றுக வழங்கும்படி தூண்டுதல் அல்லது ஏற்பாடு செய்தல் ஆகியவை இந்த உப–பிரிவிற்கு மாறுனதெனத் தெரிந்திருந்தும் ஒரு நபர் அங்ஙனம் நடப்பது சட்ட விரோதச் செயல் புரிந்த குறறத்திற்காளாவர்.

(2) உட்பிரிவு (1) இன் ஏற்பாடுகளை மீறும் எவருமு ஒரு குற்றத்துக்கு குற்றவாளியாகி ஒரு நீதவான் முன்னிலையில் உடனடியான ஒரு விசாரணைக்குப் பின்னர் குற்றவாளியாகக் காணப்படுங்கால் நூறு ரூபாய்க்கு மேற்படாத தண்டத்துக்கு அல்லது ஒரு மாதத்துக்கு மேற்படாத காலத்துக்கு இருவகை மறியல்களில் ஏதாவதொன்றுக்கு அல்லது அத்தண்டம், மறியல் ஆகிய இரண்டுக்கும் ஆளாவார்.

(3) இந்தப பிரிவின் முற்கூறிய விதி முறைகளிலுள்ள எந்த விடயம் எப்படியிருபபினும்—

(அ) ஒரு தேர்தலில் வாக்காளர்கள் தங்கள் வசிக்குமிடத்திலிருந்து கடல், அல்லது அதன் கிளை அல்லது அதன் பிரிவு அல்லது ஓர் ஆறு ஆகியவற்றைக் கடந்து செல்லாமல, தஙகள் வாக்களிப்பு நிலையங்கட்குச் செல்லவியலாதிருக்கும் பட்சத்தில் அவ்வித வாக்காளர்கட்கு கடலைக் கடந்து அவர்களின் வாக்களிப்பு நிலையங்கட்கு செல்ல சாதனமளிக்க வேண்டும். அல்லது ஆறறைக் கடந்து அவர்களின் வாக்களிப்பு நிலையங்கட்கு வந்து சேர வழி செய்ய வேண்டும். இப்படியான போககுவரத்துச் சாதனங்களுக்கு செலுத்தும் தொகை இக்கட்டளையால் அனுமதிக்கப்பட்ட செலவுத் தொகைக்கு மேற்பட்டதாயிருக்கலாம்.

(ஆ) ஒரு நபர் எந்தத் தேர்தலிலும் வாக்களிக்கப் போகவும் அல்லது அங்கிருந்து வரவும் தன் சொந்தச் செலவில், அல்லது எவரும் எத்தேர்தலிலும் வாககளிக்கப் போகவும் அல்லது அங்கிருந்து வரவும் தன் சொந்தச் செலவில் இலங்கை போக்குவரத்து சபை, இலங்கை அரசாங்க புகையிரதம், அல்லது கொழும்பு மாநகரசபை ஆகிய பொது போக்குவரத்து சேவையின் வாகனங்களைப் பாவித்தல் இந்தப் பிரிவின் விளக்கத்திற்கிணங்க சட்டவிரோதச் செயல் புரிந்ததாகக் கருதபபடமாட்டாது.

(இ) கால் நடையாக அல்லது இந்த உப–பிரிவின் (ஆ) ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள எநத பொது போக்குவரத்து வாகனத்திலும் பிரயாணம் செய்யமுடியாத சரீர பலவீனமுள்ள எவரும் அல்லது அவ்வித நபரின் சார்பாக (அபேட்சகர் அல்லாத) வேறெவரும் அத்தொகுதியில் வாக்களிப்பு நடைபெறும் தினத்திறகு ஏழு நாட்களுககு முன் அத்தொகுதிக்குரிய தெரிவத்தாட்சி உத்தர உத்தியோகத்தருக்குக் கிடைக்குமாறு எழுத்து மூலம் செய்த விண்ணைப்பத்தின் மீது அவர் திருப்தியடைந்தால், தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் அவ்வித நபர் வாக்களிககச் செல்வதற்கும் அங்கிருந்து திரும்பி வருவதற்கும் எவ்வித வாகனத்தையும் தோணியையும் அல்லது மிருகத்தையும் பாவிபபதற்கு எழுத்து மூலம் அதிகாரம் வழங்குவார். அவ்விதம் பிரயாணத்துக்கு அவ்வித நபரால் அவ்வித வாகனம் தோணி அல்லது மிருகம் பாவிக்கப்படுவது (1) ம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறியதாக கருதப்படமாட்டாது.

(4) எந்தத் தேர்தற்றொகுதியிலும் வாக்களிப்பு நடக்கும் எந்தத் தேர்தலிலும் (1) ம் உப–பிரிவிற்கு மாறுக எவ்வித வாகனமோ, தோணியோ அல்லது மிருகமோ பாவிக்கப்பட்டால், எந்தப் பொலிசு உத்தியோகத்தரும் அவ்வித வாகனத்தோணியை அல்லது மிருகத்தைத் தடுத்து நிறுத்தி அதை பொலிசு நிலையத்திற்குக் கொண்டுபோய் வாக்களிப்பு முடியும் வரையில் பாதுகாவலில் வைத்திருப்பர்.

(5) எந்த நபரும் இந்தப் பிரிவின் விளக்கத்திற்கிணங்க சட்ட விரோதச் செயல் புரிந்ததாக குற்றப்படுத்தப்பட்டதன்மீது, அங்ஙனம் பாவிக்கப்பட்ட அல்லது அவ்விதச் செயலின் தொடர்பாய் பாவிக்கப்பட்ட எந்த வாகனத்தையும் தோணியையும் அல்லது மிருகத்தையும் அரசாங்கத்திற்குச் சொந்தமாக்கிக் கொள்ளுமாறு ஒரு மாவட்ட நீதிமன்றம் கட்டளையிடலாம்.

## செய்தித் தாள்களில் பொய் அறிக்கைகள்

81உ. (1). பிரசுரிக்கும் அவ்விதச் செய்திகள் அவ்விதத் தேர்தலின் பலாபலனையளிக்கும் செல்வாக்கைப் பிரயோகிக்கவல்லதாயிருந்தால், அப்பொழுது, அவ்விதம் பிரசுரிக்கப்பட்ட நேரத்திலுள்ள புதினப் பத்திரிகையின் சொந்தக்காரர், மானேஜர், ஆசிரியர், பிரசுரிப்பாளர் அல்லது அது போன்ற இதர உத்தியோகத்தர் அல்லது அந்தத் தோரணையில் கடமையாற்றியவராகக் கருதப்படும் ஒவ்வொருவரும், அவ்விதப் பிரசுரம் தன் சம்மதமின்றி அல்லது தனக்குத் தெரியாமல் பிரசுரிக்கப்பட்டது அல்லது சகலவகையிலும் அவ்விதப் பிரசுரத்தைத் தடுக்கும் பொறுப்பில் தானிருந்தும் அங்ஙனம் தடுக்க தம்மால் இயலாமல் போய்விட்டதென அவ்வித நபர் நிருபித்தாலொழிய அப்படியான ஒவ்வொருவரும் பினவருவன சம்பந்தமாக அல்லது அதைச சாந்த எவ்விதத் தவறான செய்திகளையும் எந்தப் புதினப் பத்திரிகையிலும் பிரசுரித்தால் அங்ஙனம் செய்த ஒவ்வொருவரும் சட்டவிரோதச் செயல்புரிந்த குற்றத்திற்காளாவர்.

(அ) தேர்தல் அலுவலுககாக அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியானுலும் அல்லாவிட்டாலும் எநதத் தேர்தலிலும் போட்டியிடும எநத கடசியினதும் சொற்பொழிவுகளை அல்லது அவற்றின நடவடிக்கைகளை குறித்து, அல்லது எத்தேர்தலிலும் போட்டியிடும் எந்த அபேட்சகரினதும் சொற்பொழிவுகளை அல்லது நடவடிக்கைகளைக் குறித்து ; அல்லது

(ஆ) அவ்வித அபேட்சகரால் அல்லது அவ்வித எந்தக் கட்சியாலும் நடத்தும் அல்லது மேற்பார்வையிடும் அதுவிதத் தேர்தலைக குறித்து.

(2) உட்பிரிவு (1) இன் கீழான ஒரு குற்றத்துக்கு குற்றவாளியான எவரும் ஒரு நீதவான் முன்னிலையில் உடனடியான ஒரு விசாரணைக்குப் பின்னர் குற்றவாளியாக காணப்படுங்கால் ஐநூறு ரூபாய்க்கு மேற்படாத ஒரு தண்டததுக்கு அல்லது ஒரு மாதத்துக்கு மேற்படாத காலத்துக்கு இருவகை மறியலகளில் ஏதாவதொன்றுக்கு அல்லது அத்தண்டம், மறியல் ஆகிய இரண்டுககும் ஆளாவார்.

(3) இந்தப் பிரிவில், " புதினப் பத்திரிகை " என்பது ஒவ்வொரு நாளும் வெளியாகும் செய்தித் தாள், சஞ்சிகை, சிறு புத்தகம் அல்லது வேறெநத பிரசுரமும் என வியாக்கியானமாகும்

## பன்முறை வாக்களித்தல்

82. எவராயினும்—

(அ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான பொதுத் தேர்தல் எதிலும், ஒரு தேர்தற் பிரதேசத்திலாயினும் வெவ்வேறு தேர்தற் பிரதேசங்களிலாயினும் ஒரு தடவைக்குமேல் வாக்களித்தால் அல்லது அவ்விதம் வாக்களித்தற் பொருட்டு ஒரு வாக்குத் துண்டைக் கேட்டால் ; அல்லது

(ஆ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தேர்தல் எதிலும் எந்த தேர்தற் பிரதேசத்திலும் ஒரே வட்டாரத்தில் ஒரு தடவைக்குமேல் வாக்களித்தால் அல்லது அவ்விதம் வாக்களித்தற் பொருட்டு ஒரு வாக்குத்துண்டைக் கேட்டால்,

அவர் ஒரு குற்றத்துக்கு குற்றவாளியாகி ஒரு நீதவான முன்னிலையில் உடனடியான ஒரு விசாரணைக்குப் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுங்கால் ஒரு வருடகாலத்துக்கு மேற்படாத கடூழியச் சிறைக்கு ஆளாவார்.

## வேலையாளர்களுக்கு விடுதலை வழங்குதல் வேலை கொள்பவரின் கடமை

84எ. (1) இக் கட்டளைச் சட்டத்தின் கீழான எத்தேர்தலிலும் வாக்களிக்கும் உரிமையுள்ள ஆள் எவரிடத்தும் வேலைகொள்பவர் எவரும், அந்த ஆள் அதன்பொருட்டு எழுத்துமூலம் விண்ணப்பிக்குங்கால் அந்த ஆள் அத்தேர்தலில் வாக்களிப்பதற்கு போதுமென்று அவர்கருதும் (இரண்டு மணித்தியாலங்களுக்கு குறையாத) இடையறுத கால அளவுக்கு சம்பள இழப்பின்றி விடுதலை வழங்கவேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன் ஏற்பாடுகளை மீறும் அல்லது அவற்றிற்கியைய நடக்கத் தவறும் எவரும் ஒரு குற்றத்துக்கு குற்றவாளியாகி, ஒரு நீதவான முனனிலையில் உடனடியான ஒரு விசாரணைக்குப் பின்னர் குற்றவாளியாகக் காணப்படுங்கால், ஐநூறு ரூபாய்க்கு மேற்படாத ஒரு தண்டத்துக்கு அல்லது ஒரு மாதத்துக்கு மேற்படாத காலத்துக் இருவகை மறியல்களில் ஏதாவதொன்றுக்கு அல்லது அத்தண்டம், மறியல் ஆகிய இரண்டுக்கும் ஆளாவார்.

## அறிவித்தல்களை அல்லது சாதனங்களை அழித்தல் முதலியன

85எ. இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் எந்த அதிகாரியாலும் காட்சிக்கு வைக்கப்படும் அறிவித்தல் அல்லது இச்சட்டத்துக்கியைய பார்ப்பதற்கு கிடைக்கச் செய்யப்படும் சாதனம் எதையும் சட்டமுறையான அதிகாரமின்றி அழிக்கும், குலைக்கும், உருவழிக்கும் அல்லது அகற்றும் ஒவ்வொருவரும் ஒரு குற்றத்துக்கு குற்றவாளியாகி, ஒரு நீதவான் முன்னிலையில் உடனடியான ஒரு விசாரணைக்குப் பின்னர் குற்றவாளியாக காணப்படுங்கால், ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத தண்டத்துக்கு ஆளாவார்.

11–1241

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோபப்ரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.